# செல்வி
# பத்மா இராமநாதன்
# நினைவு மலர்

136/[illegible], அரசடி வீதி,
யாழ்ப்பாணம்,
5-5-1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

யாழ்ப்பாணம்

இந்து மகளிர் கல்லூரி

ஆசிரியையாக - துணை அதிபராக - அதிபராக

பணியாற்றி

அமரத்துவம் எய்திய

## செல்வி பத்மா இராமநாதன்

அவர்களின்

# நினைவு மலர்

126/5, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
5-5-1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் கவசம்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக
மதோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்கப் புருவந் தம்மைத்
தளர்வின்மகோ தரர்காக்க தடவிழிகள்
பால சந்திரனார் காக்க.

கவின்வளரு மதரங்கச முகர்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபு ங் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாங் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்செஞ்
செவிபாச பாணி காக்க
தவிர்தலுறு திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்ககளங் கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த
பூர்வசர்த் மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவினா
சன்காக்க விதயந் தன்னைந்
தோமகலுங் கணநாதர் காக்கவகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க.

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்லல்
உக்கண பன்காக்க வூருவைமங்
களமூர்த்தி யுவந்து காக்க

தாழ்முழந்தாண் மகாபுத்தி காக்கவிரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்தரச்செய் யாசாபூ ரகர்காக்க
விரல்பத்தும் வர்த்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர்காக்க
கிழக்கினிற்புத் திசர் காக்க

அக்கினியிற் சித்திசர் காக்கவும்
புத்திரர்தென் றிசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனமேற் கென்னுந்
திங்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகழு தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கி
லீசநந் தனரே காக்க

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கவிராக்
கதர்பூத முறுவே தசள
மோகினிபே யிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க

மதிஞானந் தவந்தான மானமொளி
புகழ்குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிரக
மனைவிமைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் றனை
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க

வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடினும்பா லிடையூ றொன்றும்
ஒன்றுறு முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதி னாலு
மன்றவராங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வி பத்மா இராமநாதன்

ஓய்வுபெற்ற அதிபர், இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.



மலர்வு: 24 – 6 – 1926 உதிர்வு: 5 – 4 – 1986

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

### அபிராமியருள்பெற்று விளங்கிய

## அபிராமிபட்டர் அருளிய

# அபிராமியந்தாதி

### காப்பு

தாரமர் கொன்றையுஞ் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை
யூரர்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும்பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் மோதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே. 1

### நூல்

உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே. 2

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையி
லணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே. 3

அறிந்தே னெவரு மறியா மறையை யறிந்துகொண்டு
செறிந்தே னுனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேனின் னன்பர் பெருமை யெண்ணாதகரும நெஞ்சான்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே. 4

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புத்தியெந் நாளும் பொருந்துகவே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையாள்
வருந்திய வஞ்சி மருங்குன் மனோன்மணி வார்சடையோ
னருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேற்
றிருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே. 6

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்றிரு மந்திரஞ் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே. 7

ததியுறு மத்திற் சுழலுமென் னாவி தளர்விலதோர்
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனு
மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கியென்றுந்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே. 8

சுந்தரி யெந்தை துணைவியென் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாண்மகி டன்றலைமே
லந்தரி நீலி யழியாத கன்னிகை யாரணத்தோன்
சுந்தரி கைத்தலத் தாண்மலர்த் தாளென் கருத்தனவே. 9

கருத்தன வெந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமு மாரமுஞ் செங்கைச் சிலையுமம்பும்
முருத்தன மூரலு நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே. 10

நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை
யென்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையி
னொன்று மரும்பொரு ளேயரு ளேயுமை யேயிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே. 11

ஆனந்த மாயென் னறிவாய் நிறைந்த வமுதமுமாய்
வானந்த மான வடிவுடை யாண்மறை நான்கினுக்குந்
தானந்த மான சரணார விந்தந் தவளநிறக்
கானந்த மாடரங் காமெம்பி ரான்முடிக் கண்ணியதே. 12

கண்ணிய துன்புகழ் கற்பதுன் னாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன்செய்த
புண்ணிய மேதென்னம் மேபுவி யேழையும் பூத்தவளே. 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணங்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற் றோர்தெய்வம வந்திப்பதே. 14

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாமெம்பி ராட்டிநின் றண்ணளியே. 15

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக் குஞ்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் குஞ்செல் வமுமழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் குஞ்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே.. 16

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து சிளர்ந்தொளிரு
மொளியே யொளிரு மொளிக்கிட மேயெண்ணி லொன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தவம்மே
அளியே னறிவள விற்கள வான ததிசயமே. 17

அதிசய மான வடிவுடை யாளர விந்தமெல்லாந்
துதிசய வானன சுந்தர வல்லி துணையிரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே. 18

வவ்விய பாகத் திறைவரு நீயு மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியு முங்கடிருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே வந்து
அவ்வியந் தீர்த்தென்னை யாண்டபொற் பாதமு மாகி
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே. 19

வெளிநின்ற நின்றிரு மேனியைப்பார்த்தென் விழியுநெஞ்சங்
களிநின்ற வெள்ளங் கரைகண்ட தில்லைக் கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானந் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்க ளொன்பது மேவி யுறைபவளே. 20

உறைகின்ற நின்றிருக் கோயினின் கேள்வ ரொருபக்கமோ
வறைகின்ற நான்மறை யின்னடி யோமுடி யோவமுதம்
நிறைகின்ற வெண்டிங்க ளோகஞ் சமோவென்ற னெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலைவே. 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலை செங்கல சம்முலை யாண்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயிற் றாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளுடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே. 22

கொடியே யிளவஞ்சிக் கொம்பே யெனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மாலிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே
யடியே னிறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே. 23

கொள்ளேன் மனத்தினின் கோலமல் லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்
குள்ளேய னைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே யளியவென் கண்மணியே. 24

மணியே மணியி னொளியே யொளிரு மணிபுனைந்த
வணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே. 25

பின்னே திரிந்துன் னடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவக்கண் முயன்றுகொண் டேன்முதன் மூவருக்கு
மன்னே யுலகுக் கபிராமி யென்னு மருமருந்தே
யென்னே யினியுன்னை யான்மறவா மனின் றேத்துவனே. 26

ஏத்து மடியவ ரீரே ழுலகினை யும்படைத் துங்
காத்து மழித்துந் திரிபவ ராங்கமழ் பூங்கடம்பு
சாத்துங் குழலணங் கேமண நாறுநின் றாளிணைக்கென்
நாத்தங்கு புன்மொழி யேறிய வாறு நகையுடைத்தே. 27

உடைத்தனை வஞ்சப் பிறவியை யுள்ள முருகுமன்பு
படைத்தனை பத்ம பதயுகஞ் சூடும் பணியெனக்கே
யடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல் லாநின் னருட்புனலாற்
றுடைத்தனை சுந்தரி நின்னரு ளேதென்று சொல்லுவதே. 28

சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தா
ளல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே. 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியுஞ் சத்தி தழைக்குஞ் சிவமுந் தவமுயல்வார்
முத்தியு முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியி னுள்ளே புரக்கும் புரத்தையன்றே. 30

அன்றே தடுத்தென்னை யாண்டுகொண்டாய் கொண்ட நல்க
நன்றே யுனக்கினி நானென் செயினு நடுக்கடலுட் [வெண்கை
சென்றே விழினுங் கரையேற் றுகைநின் றிருவுளமே
யொன்றே பலவுரு வேயரு வேயென் னுமையவளே. 31

உமையு முமையொரு பாகரு மேக வுருவில்வந்திங்
கெமையுந் தமக்கன்பு செய்யவைத் தாரினி யெண்ணுதற்குச்
சமையங் களுமில்லை யீன்றெடுப் பாளொரு தாயுமில்லை
யமையு மமையுறு தோழியர் மேல்வைத்த வாசையுமே. 32

ஆசைக் கடலி லகப்பட் டருளற்ற வந்தகன்கைப்
பாசத்தி லல்லற் படவிருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டு கொண்ட
நேசத்தை யென்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே. 33

இழைக்கும் வினைவழி யேயடுங் கால னெனைநடுங்க
வழைக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாயத்தார் சித்தமெல்லாம்
குழைக்குங் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
யுழைக்கும் பொழுதுன்னை யேயன்னை யேயென்ப னோடிவந்தே. 34

வந்தே சரணம் புகுமடி யாருக்கு வானுலகந்
தந்தே பரிவொடு தான்போ யிருக்குஞ் சதுர்முகமும்
மைந்தே னலங்கற் பருமணி யாகமும் பாகமும்பொற்
செந்தேன் மலரு மலர்கதிர் ஞாயிறுந் திங்களுமே. 35

திங்கட் பகையின் மணநாறுஞ் சீறடி சென்னிவைக்க
வெங்கட் கொருதவ மெய்திய வாவெண் ணிறந்த விண்ணோர்
தங்கட்கு மிந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேற்று யில்கூரும் விழுப்பொருளே. 36

பொருளே பொருண்முடிக் கும்போக மேயரும் போகஞ் செய்யு
மருளே மருளில் வருந்தெரு ளேயென் மனத்துவஞ்சத்
திருளேது மின்றி யொளிவெளி யாகி யிருக்குமுன்ற
னருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிகையே. 37



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கே யணிவது கன்னலும் பூவுங் கமலமன்ன
மெய்க்கே யணிவது வெண்முத்து மாலை விடவரவின்
பைக்கே யணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே யணியுந் திருவுடை யானிடஞ் சேர்பவளே. 38

பவளக் கொடியிற் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவற்
றவளத் திருநகை யுந்துணை யாவெங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்குந் துணைமுலையா
ளவளைப் பணிமின்கண் டீரம ராவதி யாளுகைக்கே. 39

ஆளுகைக் குன்ற னடித்தா மரைகளுண் டந்தகன்பால்
மீளுகைக் குன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேயன்று முப்புரங்கண்
மாளுகைக் கம்புதொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே. 40

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய வெம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சாற்
காணுதற் கண்ணிய ளல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய வெண்ணமன் றோமுன் செய்புண்ணியமே. 41

புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தா
னண்ணியிங் கேவந்து தம்மடி யார்க ணடுவிருக்கப்
பண்ணிநஞ் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே 42

இடங்கொண்டு விம்மி யிணைகொண் டிறுகி யிளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட வல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே. 43

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணியின் சொற்
றிரிபுர சுந்தரி சிந்துர மேனிய டீமை நெஞ்சிற்
புரிபுர வஞ்சரை யஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
யெரிபுரை மேனி யிறைவர்செம் பாகத் திருந்தவளே. 4

தவளே யிவளெங்கள் சங்கர னார்மனை மங்கலமா
மவளே யவர்தமக் கன்னையு மாயின ளாகையினா
லிவளே கடவுளர் யாவர்க்கு மேலை யிறைவியுமாந்
துவளே னினியொரு தெய்வமுண் டாகமெய் தொண்டுசெய்தே. 45



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டுசெய் யாதுநின் பாதந் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தாருள ரோவில ரோவப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மோவன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே. 46

வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற் றானிடப் பாகங் கலந்தபொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே. 47

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநில
மேழும் பருவரை யெட்டுமெட் டாம லிரவுபகற்
சூழுஞ் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 48

சுடருங் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சி
லிடருந் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னு மெய்துவரோ
குடருங் கொழுவுங் குருதியுந் தோயுங் குரம்பையிலே. 49

குரம்பை யடுத்துக் குடிபுக்க வாவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்மை யடுத்து மறுகுமப்போது வளைக்கையமைத்
தரம்பை யடுத்த வரிவையர் சூழவந் தஞ்சலென்பாய்
நரம்பை யடுத்த விசைவடி வாய்நின்ற நாயகியே. 50

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வராகி சூலினி மாதங்கியென்
றாயகி யாதி யுடையாள் சரணம் அரணமக்கே. 51

அரணம் பொருளென் றருளொன் றிலாத வசுரர் தங்கண்
முரணன் றழிய முனிந்தபெம் மானு முகுந்தனுமே
சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி யிரண்டுமெய் தாரிந்த வையகத்தே. 52

வையந் துரக மதகரி மாமகு டஞ்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த
வையன் திருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே. 53



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையுமுத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில் வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலுந் தவமில்லையே. 54

இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சி னினைகுவி ரேனித்த நீடுதவங்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலுஞ்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே 55

மின்னா யிரமொரு மெய்வடிவாகி விளங்குகின்ற
அன்னா ளகமகி ழானந்த வல்லி யருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
யுன்னா தொழியினு முன்னினும் வேண்டுவ தொன்றில்லையே. 56

ஒன்றா யரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்றா ளனைத்தையு நீங்கிநிற் பாளென்ற னெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாவிப் பொருளறிவார்
அன்றா லிலையிற் றுயின்றபெம் மானுமென் னையனுமே. 57

ஐய னளந்த படியிரு நாழிகொண் டண்டமெல்லா
முய்ய வறஞ்செயு முன்னையும் போற்றி யொருவர் தம்மாற்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையுங் கொண்டு சென்றுபொய்யு
மெய்யு மியம்பவைத் தாயிது வோவுன்றன் மெய்யருளே. 58

அருணும் புயத்துமென் சித்தாம் புயத்து மமர்ந்திருக்குந்
தருணம் புயமுலைத் தையனல் லாடகை சேர்நயனக்
கருணம் புயமும் வதனம் புயமுங் கராம்புயமுஞ்
சரணம் புயமுமல் லாற்கண்டி லேனொரு தஞ்சமுமே 59

தஞ்சம் பிறிதில்லை யீதல்லதென்றுன் றவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேனொற்றை நீள்சிலையு
மஞ்சம்பு மிக்கல ராகநின் றாயறி யாரெனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யாரடி யார்பெற்ற பாலரையே 60

பாலினுஞ் சொல்லினி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினுந் தேவர் வணங்கிநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினுங் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
நாலினுஞ் சாலநன் றோவடி யேன்முடை நாய்த்தலையே. 61



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயே னையுமிங் கொருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டுகொண் டாய்நின்னை யுள்ளவண்ணம்
பேயே னறியு மறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன்
றாயே மலைமகளே செங்கண் மால்திருத் தங்கைச்சியே 62

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரஞ் சாய்த்துமத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பு மலருமெப் போதுமென் சிந்தையதே. 63

தேறும் படிசில வேதுவுங் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றிற் கொட்டுந் தறிகுறிக் குஞ்சமய
மாறுந் தலைவி யிவளாக யிருப்ப தறிந்திருந்தும்
வேறுஞ் சமயமுண் டென்றுகொண் டாடிய வீணருக்கே. 64

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு
பூணே னுனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழ்ச்சியன்றிப்
பேணே னொருபொழு துந்திரு மேனிப்ர காசமன்றிக்
காணே னிருநில முந்திசை நான்குங் ககனமுமே. 65

ககனமும் வானும் புவனமுங் காணவிற் காமனங்கந்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையுஞ்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே. 66

வல்லப மொன்றறி யேன்சிறி யேனின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்றொன் றிலேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்றொடுத்த
சொல்லவ மாயினு நின்றிரு நாமங்க டோத்திரமே, 67

தோத்திரஞ் செய்து தொழுதுமின் போலுநின் றோற்றமொரு
மாத்திரைப் போது மனதில்வை யாதவர் வண்மைகுலங்
கோத்திரங் கல்வி குணங்குன்றி நாளுங் குடில்கடொறும்
பாத்திரங் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே. 68

பாரும் புனலுங் கனலும்வெங் காலும் படர்விசும்பு
மூரும் முருகு சுவையொளி யூறொலி யொன்றுபடச்
சேருந் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாருந் தவமுடை யார்படை யாத தனமில்லையே. 69



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே. 70

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியிற்
பண்களிக் குங்குரல் வீணையுங் கையும் பயோதரமு
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய வெம்பெரு மாட்டிதன் பேரழகே. 71

அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி யருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
விழவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக் கென்குறையே. 72

என்குறை தீரநின் றேத்துகின் றேனினி யான்பிறக்கி
னின்குறை யேயன்றி யார்குறை காணிருநீள் விசும்பின்
மின் றை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரவெங் கோன்சடை மேல்வைத்த தாமரையே. 73

தாமங் கடம்பு படைபஞ்ச பாணந் தனுக்கரும்பி
யாமம் வயிரவ ரேத்தும் பொதுநமக் கென்றுவைத்த
சேமந் திருவடி செங்கைக ணான்கொளி செம்மையம்மை
நாமந் திரிபுரை யொன்றோ டிரண்டு நயனங்களே. 74

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமு நாரணனு
மயனும் பரவு மபிராம வல்லி யடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவைய ராடவும் பாடவும்பொற்
சயனம் பொருந்து தமனியக் காவினிற் றங்குவரே. 75

தங்குவர் கற்பகத் தாருவி னீழலிற் றாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவ ராழியு மீரேழ் புவனமும் பூத்தவுந்திக்
கொங்கிவர் பூங்குழ லாடிரு மேனி குறித்தவரே. 76

குறித்தேன் மனத்தி னின்கோல மெல்லாநின் குறிப்பறிந்து
மறிந்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தே னவிழ்கொன்றை வேணிப் பிரானொரு கூற்றை மெய்யிற்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே. 77



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிரவி பஞ்சமி பாசாங் குசை பஞ்ச பாணிவஞ்ச
நயிரவி யுண்ணி யுயர்சண்டி காளி யொளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 78

செப்புங் கனக கலசமும் போலுந் திருமுலைமே
லப்பும் களப வபிராம வல்லி யணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையுந்
துப்பு நிலவு மெழுதிவைத் தேனென்று றுணைவிழிக்கே. 79

விழிக்கே யருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம் மோடென்ன கூட்டினியே. 80

கூட்டிய வாவென்னைத் தன்னடி யாரிற் கொடியவினை
யோட்டிய வாவென்க ணோடிய வாதன்னை யுள்ளவண்ணங்
காட்டிய வாகண்ட கண்ணு மனமுங் களிக்கின்றவா
வாட்டிய வாநட மாடகத் தாமரை யாரணங்கே. 81

அணங்கே யணங்குக ளின்பரி வாரங்க ளாகையினால்
வணங்கே னொருவரை வாழ்த்துகிலே னெஞ்சில் வஞ்சகரோ
டிணங்கே னெனதுன தென்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கே னறிவொன்றி லேனென்க ணீவைத்த பேரளியே. 82

அளியார் கமலத்தி லாரணங் கேயகி லாண்டமுநின்
னொளியாக நின்ற வொளிர்திரு மேனியை யுள்ளுதொறுங்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடினெங்ங னேமறப் பேனின் விரகினையே. 33

விரவும் புதுமல ரிட்டுநின் பாத விரைக்கமல
மிரவும் பகலு மிறைஞ்சவல் லாரிமை யோரெவரும்
பரவும் பதமு மயிரா வதமும் பகீரதியு
முரவுங் குலிசமுங் கற்பகக் காவு முடையவரே. 84

உடையாளை யொல்கு செம்பட் டுடையாளை யொளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்கு நுண்ணூ
லிடையாளை யெங்கள் பெம்மா னிடையாளை யிங்கென்னையினிப்
படையாளை யுங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே. 85



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்குந் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்
டார்க்கும் புதுமல ரைந்துங் கரும்புமென் னல்லலெல்லாந்
தீர்க்குந் திரிபுரை யாடிரு மேனியுஞ் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேன்முத்து மாலையுமே. 86

மாலயன் றேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையுஞ் சூடகக் கையையுங் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலனென் மேல்விடும் போதுவெளி நில்கண்டாய்
பாலையுந் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. 87

மொழிக்கு நினைவுக்கு மெட்டாத நின்றிரு மூர்த்தியென்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யான்மதனை
யழிக்குந் தலைவ ரழியா விரதத்தை யண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே. 88

பரமென் றுனையடைந் தேன்றமி யேனுமுன் பத்தருக்குட்
டரமன் றிவனென்று தள்ளத் தகாதுதம் தரியலர்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன்று செற்றகை யானிடப் பாகஞ் சிறந்தவளே. 89

சிறக்குங் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கந் தருநின் றுணைவரு நீயுந் துரியமற்ற
வுறக்கந் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு
மறக்கும் பொழுதென் முன்னேவரல் வேண்டும் வருந்தியுமே. 90

வருந்தா வகையென் மனத்தா மரையினில் வந்துபுகுந்
திருந்தாள் பழைய விருப்பிட மாக வினியெனக்குப்
பொருந்தா தொருபொரு ளில்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கு மெல்லியலே. 91

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணந் தொழுமடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லிய மார்த்தெழ வெண்பக டூரும் பதந்தருமே. 92

பதத்தே யுருகிநின் பாதத்தி லேமனம் பற்றியுன்ற
னிதத்தே யொழுக வடிமைகொண் டாயினி யானொருவர்
மதத்தே மதிமயங் கேனவர் போன வழியுஞ்செல்லேன்
முதற்றேவர் மூவரும் யாவரும் போற்று முகிழ்நகையே. 93

நகையே யிஃதிந்த ஞானமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவிலந்த
வகையே பிறவியும் வம்பே மலைமக ளென்பதுநா
மிகையே யிவடன் றகைமையை நாடி விரும்புவதே. 94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளக
மரும்பித் ததும்பிய வானந்த மாகி யறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாந்
தரும்பித்த ராவரென் றாலபி ராமி சமயநன்றே. 95

நன்றே வருகினுந் தீதே விளைகினு நானறிவ
தொன்றேயு மில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லா
மன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே. 96

கோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யேதமி லாளை யெழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயி றன்னைத்தம்மா
லாமள வுந்தொழு வாரெழு பாருக்கு மாதிபரே. 97

ஆதித்த னம்புலி யங்கி குபேர னமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன் முதற்
சாதித்த புண்ணிய ரெண்ணிலர் போற்றுவர் தையலையே. 98

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்கு
கைவந்த தீயுந் தலைவந்த வாறுங் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சினில் லாலொரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சிற் புகவறி யாமடப் பூங்குயிலே! 99

குயிலா யிருக்குங் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலா யிருக்கு மிமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பிற் கமலத்தின் மீதன்னமாங்
கயிலா யருக்கன் றிமவா னளித்த கனங்குழையே. 100

குழையைத் தழுவிய கொன்றையந்தார் கமழ்கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளுங் கருப்புவில்லும்
விழையைப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையு
முழையைப் பொருகண்ணு நெஞ்சிலெப்போது முதிக்கின்றனவே.

## நூற்பயன்

ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங் குசமுங் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு தீங்கில்லையே.

அபிராமியந்தாதி முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவைக்கென வந்த
## செல்வி பத்மாவதி இராமநாதன்

இன்று செல்வி பத்மாவதி இராமநாதன் எங்கள் மத்தியில் இல்லை. ஆனல் அப்படி நினைப்பதற்கு எம் மனம் மறுக்கின்றது. ஏன்? அவரின் உயர்ந்த தோற்றம், நீறணிந்த நெற்றியுடன் நேரிய பார்வை, பதற்றமில்லா உறுதிகொண்ட நடை, கருமமே கண்ணான போக்கு, தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ற உடை, அரிமா நோக்கு. அதாவது கல்லூரியின் கடந்த காலப் பாதையையும் அதன் எதிர்கால வளர்ச்சிப் பாதையையும் நிதானிக்கும் பார்வை ஆதியன எம் மனதை விட்டகலாதவையாகும். உண்மை, நேர்மை, கடமை என்பவற்றைக் கேடயமாகக் கொண்டு நிர்வாகம் நடத்திய அதிபர் அவர்.

கல்லூரியின் வளர்ச்சியில் இவர் அதிபராக இருந்த காலத்தை பொற்காலம் என்று கூறுவது மிகையாகாது. இன்று இந்து மகளிர் கல்லூரி ஒரு தேசியக் கல்லூரி (National School) என்ற பெயரைப் பெறுகிறதென்ருல் அதன் சிற்பி செல்வி பத்மா இராமநாதனேயாவார். ஒழுக்கம், கட்டுப்பாடு, கல்லூரிக்குக் காலம் தாழ்த்தாது வருதல் ஆகிய நற்பண்புகளை தான் கடைப்பிடித்து ஆசிரிய, மாணவ உலகிற்கும் ஓர் இலக்கணமாகத் திகழ்ந்துள்ளார். சுருங்கக் கூறின் சமுதாயம் எப்படி வாழவேண்டுமென்பதை வாழ்ந்து காட்டியுள்ளார்.

'அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பு இல்லாதவர்' என்ற திருவள்ளுவர் வாய்மொழிக்கேற்ப தனியே கல்வி மட்டும் போதாது வாழ்க்கையில் மக்கள் பண்புடையோராயும் சமயப் பற்றுடையவர்களாகவும் இருந்தால் மட்டுமே வாழ்வு பூரணப்படும் என்ற கொள்கைப்படி மாணவியருக்கு கல்வியோடு சமயத்தொண்டு, சமயப்பற்று, வாய்மை, அறநெறி ஆகிய சீரிய பண்புகளைப் புகட்டத் தவறியதில்லை. அதைச் செய், அப்படிச் செய் என்று சொல்லாது தான் வாழ்ந்து காட்டியதன் மூலம் மற்றையோரையும் வழிநடத்தியுள்ளார். இதனுல் யாழ். இந்து மகளிர் கல்லூரியை நாடி மாணவியர் கூட்டம் நாடியதில் ஆச்சரியம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருடைய 'கருமமே கட்டளைக் கல்' என்பதற்கேற்ப தன் முழுநேர வாழ்வையும் கல்லூரிக்கே அர்ப்பணித்தார். கல்வியும் கடவுட் பற்றும் இரு கண்கள் என்பதற்கேற்பக் கலலூரி வளர்ச்சியோடு நின்றுவிடாது கல்லூரி வளவில் அமைந்துள்ள விநாயகர் ஆலயத்தைத் தன் சேவைக்காலம் முடிவதற்கு முன் புனருத்தாரணம் செய்தமையும் அவரின் சிறிய தொண்டுகளில் ஒன்றாகும். தனது இறுதிமூச்சு இருக்கும்வரை காலை, மாலை இருவேளைகளிலும் கல்லூரி விநாயகருக்கு தனது கையாலாயே மலர் பறித்து மாலை தொடுத்து ஆலய பூசகரைக் கொண்டு விநாயகருக்கு அணிவிப்பது அவரின் அன்றாட வாழ்வின் ஓர் அம்சமாகும்.

யாழ். இந்து மகளிர் கல்லூரிக்காகச் சேவையாற்றி வந்தார். அப்படிச் சேவையாற்றி அறுபது (60) வயதைப் பூர்த்தி செய்ததன் பின் வந்த வேலை முடிந்துவிட்டது. 'எப்பவோ முடிந்த காரியம்' என்று எண்ணுமளவிற்கு அவரின் இவ்வுலக வாழ்வு நிறைவுபெற்றுள்ளது. ஆனல் யா. இ. ம. க. இருக்குமளவிற்கும் எல்லோருடைய உள்ளத்திலும் நிறைந்திருப்பார் என்பது திண்ணம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

திருமதி தி. நாகராஜா

அதிபர்,
யா. இ. ம. க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி வாழும்; கதை சொல்லும் ஏந்நாளும்

யா. இந்து மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் செல்வி ப. இராமநாதன் இன்று நம்மிடையே இல்லை. முப்பத்து ஆறு ஆண்டுகள் செல்வி இராமநாதன் இக்கல்லூரியில் பணியாற்றியிருக்கிறார். ஆசிரியையாக, துணை அதிபராக, அதிபராக யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பணியாற்றிய அவர் 1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதிதான் ஓய்வு பெற்றார்.

அவர் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற ஓராண்டுக்குள்ளேயே உலக வாழ்வை நீத்துவிட்டது அவருடன் பழகிய அனைவருக்கும் பெரும் துக்ககரமான சம்பவமாகும்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவியர், பெற்றோர், ஆசிரியைகளைப் பொறுத்தளவில் செல்வி இராமநாதனின் மரணம் பெரும் இழப்பாகும்.

முப்பத்து ஆறு ஆண்டுகள் கல்லூரியில் நேரிடையாகப் பணியாற்றிய செல்வி இராமநாதன் ஓய்வுபெற்ற பின்பும் கல்லூரியில் அதிக அக்கறை காட்டினார். கல்லூரி அபிவிருத்திச் சங்க உறுப்பினரின் நெருக்குதல் மூலம் கல்லூரிக்கு ஒரு நிரந்தர அதிபரைப் பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கத்தில் அவர் இது சம்பந்தமாக என்போன்றோருடன் அடிக்கடி கதைத்து எங்களைச் செயற்படத் தூண்டினார்.

செல்வி இராமநாதன் அதிபராக விளங்கிய காலத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளதைப் பலரும் அறிவர். மாணவியரின் படிப்பு, ஒழுக்கம் ஆகிய அனைத்துத் துறையிலும் செல்வி இராமநாதன் அக்கறையாகவும் கண்டிப்பாகவும் இருந்தது அவரிடம் காணப்பட்ட சிறப்பம்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காக வருவது, தமிழ்ப் பண்பாட்டைப் பேணி உடை அணிந்து, தலைவாரிக் கொள்வது போன்ற சகல விடயங்களிலும் அவர் கவனமாகவும் கண்டிப்பாகவும் நடந்தது மாணவியரின் பெற்ருேருக்கு திருப்தி அளித்திருக்கும் என்றே நம்புகி றேன்.

ஆளுமை மிக்க செல்வி இராமநாதன் அதனை முழுமையாகப் பயன்படுத்தி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பணியாற்றினர். இதன் காரணமாக கல்லூரி வரலாற்ருேடு அவர் வரலாறு கலந்து விட்டது. செல்வி இராமநாதன் மறைந்துவிட்டார். ஆயினும் யாழ். இந்து மகளிர் கல்லூரி தொடர்ந்து வாழும். அது செல்வி இராம நாதனின் கதையைச் சொல்லும். யாழ். இந்து மகளிர் கல்லூரியின் வரலாற்றில் செல்வி இராமநாதன் அழிக்கப்படமுடியாத ஓர் அத்தி யாயத்தை எழுதிவைத்துச் சென்றுவிட்டார். அதனுல் அவர் பெயர் என்றென்றும் நிலைத்திருக்கும்.

அவரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திப்போம்.

துணைத்தலைவர், — செ. கோடீசுவரன்
யா. இ. ம. க. அபிவிருத்திச் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்/ இந்து மகளிர் கல்லூரியில் 36 ஆண்டு சேவையாற்றி
ஓய்வுபெற்ற அதிபர்

## செல்வி இராமநாதன் அவர்கட்கு

27-7-86 அன்று மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் நடாத்தப்பெற்ற பாராட்டு விழாவில் ஒலித்த பாடசாயின் குரல் இது

இக் கவிதை அதிபரின் பழைய மாணவி

திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்களால் ஆக்கி பாடி அளிக்கப்பட்டது

# அன்னையே உன்னையும் பிரிவதா!

அன்னையே என்றேன் உன்னை ஆச்சரியமா?
செல்விதான் நீ;
இருப்பினும் எனக்கு நீ அன்னை
கன்னிமேரி அன்னைமேரி ஆகவில்லையா?
கார்த்திகைப் பெண்கள் குமரனையும்
வளர்க்கவில்லையா? 1

அன்று நீ வந்தாய் இங்கு,
தமிழ் போதிக்கும் ஆசிரியையாய் —
நெடிய தோற்றம் நிமிர்ந்த பார்வை
பாரதி கண்ட புதுமைப் பெண்ணே!
நல்ல தமிழ் கற்பிக்க வந்த நல்ல
தமிழ் அணங்கே!
நிமிர்ந்த நன்நடையிலும் அமைதி உறைந்தது —
நேரிய பார்வையிலும் பண்பு மிளிர்ந்தது —
மகிழ்ந்தேன் — யான். 2

நாட்கள் நகர்ந்தன —
நானும் வளர்ந்தேன் —
நல்லதோர் பாக்கியம் பெற்றது
யார்? நீயா! நானா?
நானே தான் மறுப்பேனா! மறப்பேனா! 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாய் அடக்கமாய் அளப்பரிய
பணிகள் ஆற்றினாய் நீ!
ஒன்றா! இரண்டா! எடுத்து இயம்ப
இருப்பினும் எனக்கோர் கடமை உண்டு –
நன்றி மறப்பது நன்றல்லவே! எனவே –
பெருமையுடன் நினது பணி சில உரைப்பேன்
எனை வளர்த்த அன்னையே கேள்! 4

கடமையைச்செய் பலனை எதிர்பாராதே –
என்றான் கண்ணன் அன்று
அதனையே கொள்கை எனக்கொண்டாய் நீ இன்று!
நின் அரிய பணிகளால் எந்தன் தரமும் உயர்ந்தது
கவின்மிகு கல்லூரியாய் ஆக்கினாய்
என்னை நீ 5

'கடமையும் கண்ணியமும் கட்டுப்பாடும் கலந்து' –
நானிலம் புகழும் நல்லமாதராய்
எம் சிறார் வளர்ந்திட வேண்டும் என்பதற்கமைய
நின் திருப்பார்வையில் — இல்லை
நின் மேற்பார்வையில் — எம் சிறார்
கற்றனர் – கற்றனர் – கற்றனர்
கொஞ்சமா? நஞ்சமா? 6

அகிலம் புகழ் ஆங்கிலம் என்ன!
அழகொழுகு தமிழ் என்ன!
இனிய நல்லிசை என்ன!
இங்கிதம் நிறை சமையல் என்ன!
கணிதமும் விஞ்ஞானமும்
கவினுறு கலைகளும் கற்றனர்
கற்றனர் கச்சிதமாகவே. 7

ஆடினர், பாடினர் கூடவே விளையாடினர்
எங்கவர் சென்றாலும் – அவர்க்கே முதலிடம்
யார் அவர்! யார் அவர்! அவரே எம்சிறார்
பாடினர் – படித்தனர் – பட்டமும் பெற்றனர்
பல்கலைக் கழகமும் பாங்குடன் சென்றனர்
இதன் – பெருமையும் நன்றியும் உந்தனுக்கன்றோ! 8

சேய்மையில் வதியும் சிறார்களுக்கமைய
சிறந்ததோர் விடுதி சீராக அமைத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புடன் ஆங்கோர் சீரிய தோட்டம்
வீட்டின் நினைவை மறந்தனர் இவர்கள்
அத்தனை வசதி - அத்தனை ஒழுங்கு
அத்தனையும் அவர்கள் பெற்றனர் ஆங்கு. 9

காலையில் படிப்பு கவினுடன் பாட்டு
மாலையில் ஓய்வு அதனைத் தொடர்ந்தே
இறையின் வணக்கம்
இன்பமாய் மாலையும் தொடுத்தனர்.
சாத்தினர், மகிழ்ந்தனர் அம்மா!
அத்தனையும் உன் வழிகாட்டல் அன்றோ!
அன்னையின் அன்பும் ஆசானின் கண்டிப்பும்
அத்தனையும் உன்னிடம் அவர்கள் பெற்றனர்
அவர்கள் தான் எம் விடுதிச்சிறார்கள். 10

குஞ்சுப் பறவையைக் காத்த அன்னைபோல்
உந்தன் அரவணைப்பில் வளர்ந்தனர் அவர்கள்
அவர்கள் மட்டுமா? யானுமேதான்
மண்டபம் என்ன! மாடி என்ன!
விடுதி என்ன! விளையாட்டரங்கென்ன!
ஒவ்வோர் துறைக்கும் ஒவ்வோர் மண்டபம்
அங்கும் மண்டபம், இங்கும் மண்டபம்
மண்டபமா அவை? மாளிகையன்றோ!
என்னைக் கேட்பின் அவைதான் எனது வசந்தமாளிகை. 11

எந்த நேரமும் ஏதோ ஓர் பகுதியில்
உன்னை நான் காண்பேன்
அமைதியும் கொள்வேன்
இறவொன்றுதான் எம்மைப் பிரித்திடும். 12

காலை மலரும் — ஏங்கி நிற்பேன் நான்
அடிமேல் அடிவைத்து நீயும் வருவாய்
அகமகிழ்வேன் நான்
'அழகுத் தெய்வம் மெல்ல மெல்ல
அடி எடுத்து வைத்ததோ'
பாடிடுவேன் எனக்குள்
கேட்டிருக்க மாட்டாய் நீ 13

என்னதான் நேரினும், எச்சந்தர்ப்பத்திலும்
நிதானம் ஒன்றை நீ தவறியதில்லை,
பதற்றமோ பரபரப்போ
இல்லை உன் அகராதியில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே தான் உன்
வெற்றியின் இரகசியம். 14

காலையும் என்னுடன் நண்பகல் என்னுடன்
மாலையில் என்னுடன்
எனவேதான் உன்னை
அன்னை என்றேன் ஆரம்பத்திலே. 15

உணவு உண்டிட வீடு சென்றிடின்
நேரம் போய்விடும் என்ற நல்நோக்குடன்
கட்டிய உணவுப்பொதியுடன்
நீ வந்திடும் காட்சியை; நான்
ரசித்த நாட்கள் — எத்தனை! எத்தனை!
எந்தன் அன்னை கடமையின் இருப்பிடம்
எந்தன் அன்னை அடக்கத்தின் அமைவிடம்
எந்தன் அன்னை அன்பின் உறைவிடம்
எந்தன் அன்னை பண்பின் வதிவிடம். 16

என்னுடன் சேர்ந்து வளர்ந்தவர் ஒருவர்
அவரே எமது அருகிருக்கும் பிள்ளையார்
காலையும் மாலையும் நீயின்றிப் பூசையில்லை
அத்தனை பக்தி அவரிடம் உந்தனுக்கு!
பூக்கொண்டு, துப்பார் திருமேனி துதித்த உனக்கு,
தப்பாமல் அவனருள் என்றும் கிடைக்கும். 17

அன்னையே! என்தாயே!
இத்தனையும் எனக்கு ஆற்றிய இனியதாயே!
உன்னை யான் பிரிவதா! இல்லை
என்னை நீ பிரிவதா!
முடியுமா என்றால்!
பிரிவு என்பது சொல்லளவிலேதான்
உள்ளத்தால் அல்ல உண்மையும் இதுவே. 18

காரணம் – நானும் நீயும் வேறன்று
ஒன்றே! ஒன்றே! உண்மைதானே
என் பெயர் கூறின் ஏற்றுக்கொள்வாய்
நான் யார் தெரியுமா?
சொல்லத்தான் நினைக்கின்றேன்
நான் தான் உந்தன் செல்லப்பிள்ளை
யா! இந்து மகளிர் கல்லூரி. 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமை முடிந்தது; கண்ணியம் நிலைத்தது

ஸ்வே ஸ்வெ கர்மண்ய பிரத ஸம்ஸித்திம் லபதே நர
ஸ்வகர்ம நிரத ஸித்திம் யதா விந்தஇ தச்ச்ருது — பகவத்கீதை

அவனவனுக்கு உரிய கர்மத்தில் களிப்புறும் மனிதன் நிறைநிலை எய்துகிறான். பயிற்சியால் எந்தக் கர்மத்துக்கும் தகுதியுடையவனாக மனிதன் தன்னைச் செய்து கொள்கிறானோ அது அவனுடைய ஸ்வ கர்மமாகின்றது. ஸ்வகர்மம் என்பதும் அதுவே.

ஸ்வகர்மத்தை மகிழ்வுடனும் ஊக்கத்துடனும் செய்பவன் நல்ல ஆத்ம சாதகன் ஆகின்றான். கிருஷ்ண பரமாத்மா போதித்த வழி யில் தனது வருணத்தில் தன் கர்மத்தை முடித்துக் கொண்ட அமரரான செல்வி பத்மாவதி இராமநாதன் அவர்களின் வாழ்க்கை எமக்கு ஒரு போதனையாகவே அமைந்துள்ளது.

எனது உடன்பிறவாச் சகோதரியான செல்வி பத்மாவதி அவர் களின் நினைவுகளை உறவினன் என்னும் நிலையினின்றும் வழுவிச் சொந்த ஆசாபாசங்களுக்கு அப்பாற்பட்டுச் சில நிகழ்வுகளை நினைவு கூர்வது பொருந்தும் என நான் நம்புகிறேன்.

செல்வி பத்மாவதி இராமநாதன் சாதாரண ஆசிரியராகவும் உதவி அதிபராகவும் முப்பத்தைந்து ஆண்டு யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அவர் ஊழியம் அவரிடம் கல்வி கற்ற பல மாணவர் களும் பெற்றோர்களும் நன்கறிவர்.

ஏற்றுக்கொண்ட கடமையில் தன் உறவினர்களை தன் நண் பர்களை அறிமுகமில்லாத சகலரையும் ஒரே கண்ணோட்டத்திலேயே மதிப்பளிக்கத் தொடங்கினார்.

தன் வழி நேர்மையானது, உயர் இலட்சியங்களைக் கொண் டது என்பதில் கொண்ட திடத்தால் யாருக்கும் சலுகைக்காக விட்டு விடும் மசிந்துவிடும் தன்மை அவரை என்றும் பற்றியது கிடை யாது. இதனால் அவர் பல சமயங்களினால் நெருக்கடிகளுக்கு உள் ளானார்.

அமரரின் சிறிய தந்தையாரான அமரர் த. . சண்முகதாசன் (எனது தந்தை) தன் உறவினரைப் பாடசாலைப் பிரவேசத்துக்காக அழைத்துச் சென்றார். அவருக்கு பிரவேச அனுமதி கிடைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் முயற்சி தோல்வி. ஆனால் மிக்க சந்தோஷத்துடன் வெளியே வருகின்றார். அவர் சொன்ன வார்த்தை இதுதான். எனது உற வினருக்கு பிரவேசம் கிடைக்காவிட்டாலும்; எனது பெருமகளின் தன்னலமற்ற நேர்மையையிட்டு நான் பெருமையடைவதுடன் அவர் பிறப்பு, கல்விக்கான அவதாரம் என உணர்கிறேன். அவருக்குக் கிடைத்த அனுபவங்கள் யாழ். மாவட்டத்தில் பல பிரமுகர்களுக்கும் தொடர்ச்சியாகக் கிடைத்துள்ளது.

ஆரம்பக் கல்வியை கற்ற கட்டுடை சைவ வித்தியாசாலைக்கு தன்கடமையாக அவர் நிர்மாணித்தமேடை அவர் உணர்வை உணர்த்தி நிற்கிறது. அவர் குலதெய்வம் கட்டுடை அரசடி விநாயகர். அவர் நிறைவேற்றி வந்த பூசை தொடர்ந்து நடைபெற்றுவர வங்கியில் வேண்டிய நிதியை வைப்பில் இடமுயற்சி செய்தமை, இப்பிறவி நீங்கிலும் அவர் தொடர்ந்த முயற்சிகள் தடையுறு நடைபெற அவர் வகுத்த வழி எமக்கு ஒரு போதனை.

யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையிலேயே தனது இருப்பிடத்தை அமைத்துக் கொண்டு அவரது குடும்பம் அவர் கல்வி கற்பித்த கல்லூரியே என வாழ்ந்தவர்.

" புத்யா விசுத்தயா யுக்தோத்ருத்யாத்மானம் நியம்யச
சப்தாதீன் விஷயான்ஸ்த்யக்த்வா ராகத்வேஷௌ வ்யுதம். ச "

தூய அறிவுடன் கூடியவன் உறுதியுடன் தன்னையடக்கியும், சப்தம் முதலிய இந்திரிய விஷயங்களைத் துறந்தும் விருப்பு வெறுப்பு விட்டொழித்தும் இருப்பான். சுத்தியடைந்த புத்தியானது ஐயமும் திரிபும் நீங்கப் பெற்றுள்ளது. உறுதியுடன் உடலையும் உள்ளத்தையும் அடக்கி ஆளுபவன் மேலோன் ஆகிறான். மிகைப்பட்ட பொருள்களை ஆத்ம சாதகன் தனக்கென்று வைத்துக் கொள்வதில்லை. உடல் வாழ்க்கைக்கு இன்றியமையாத; உணவுப் பொருள், உடை முதலியவைகளை, தவிர வேறு ஆடம்பரமான பொருள்களை அவனிடத்து காணமுடியாது. பகவத்கீதை போதிக்கும் மேற்கண்ட வழிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் பத்மாவதி அக்காவின் வாழ்க்கைக்கு உள்ள முற்று முழுதான [illegible]மையை அறிஞர்கள் பலர் பல இடங்களிலும் விமர்சிக்கும்போது அன்னாரின் பிறப்பு ஒரு அவதாரமாகவே யான் உணர்கின்றேன் அன்னாரின் உடன் பிறவாச் சகோதரனாக இறுதிக் கடமை செய்ய எனக்குக் கிடைத்த பெரும் பேறை இன்று நினைக்க என் மெய் சிலிர்க்கிறது. அன்னாரின் இறுதி நிகழ்வின்போது ஒரு பெரியார் என்னிடம் கூறிய தேறுதலை நினைவு கொள்கிறேன்.

"யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பொற்காலம் ஒன்றை நிர்மாணம் செய்ய அவதாரம் பெற்றவர்தான் செல்வி பத்மாவதி என்பதில் ஐயம் இல்லை. அவரின் கர்மம் முடிவடைந்தது. அவரின் ஆன்மா சத் சித் ஆனந்த சொருபத்தில் இரண்டறக் கலந்து விட்டது. கடமை முடிந்து அவர் விட்டுச் சென்ற கண்ணியம் என்றும் நிலைக்கும்".

சுபம்.

ச. சிவகுமாரன்
பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்
மானிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்கண்ட அதிபர் மிஸ் பி. இராமநாதன்

"தானே அதுவாய் அதுவே தானுய்" இந்து மகளிர் கல்லூரி யோடு கலந்திருந்த அதிபர் செல்வி பி. இராமநாதன் இன்று நம் மிடையே இல்லை. அதிபருக்கு அறுபது வயது நிறைந்துவிட்டது என் பதை அவர் இளைப்பாறும் செய்தியே அறியத்தந்தது. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியுடன் 'அத்துவித' மாகியிருந்தவர் அதிபர் இராமநாதன். அப்பணியில் இருந்து திடீரென விலகியதும் அவரது உடல் உளப்பாதிப்புக்குக் காரணமாகுமோ என்று எண்ணத் தோன்று கின்றது.

நீண்ட கல்விப் பாரம்பரியத்தையுடைய யாழ்ப்பாணம் பல திறமைமிக்க அதிபர்களைக் கண்டிருக்கின்றது. தாம் பணியாற்றும் நிறுவனத்தோடு அத்துவிதமாகித் 'தம்மை இழந்த' அதிபர்களுள் மிஸ். பி. இராமநாதனும் விதந்து குறிப்பிடப்படவேண்டியவர். (செல்வி ப. இராமநாதன் எனக்குறிப்பிடுவதிலும்பார்க்க மிஸ் இராம நாதன் என்று அழைப்பதே வலுவுடையதாகத் தோன்றுகின்றது. நீண்டகாலமாக ஆயிரமாயிரம் மாணவர்கள் மிஸ் இராமநாதன் என்று உச்சரித்தமையாலே அச் சொற்பிரயோகத்திற்கு ஒருவித வலு தோன்றியுள்ளது.)

பலவகையிலும் ஆற்றல் வாய்ந்த மிஸ் இராமநாதனைப்பற்றி எழுதும் பொழுது என்னைப்பற்றிக் குறிப்பிடுவதும் தவிர்க்கமுடியாத தாகின்றது.

1980 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். நண்பர் மயிலங்கூடல் பி. நடராஜனின் ஏற்பாட்டின் பேரில் இந்து மகளிர் கல்லூரியில் பல்கலைக்கழக உயர்தர வகுப்பு மாணுக்கர்களுக்கான கருத்தரங்கு தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. ஒருநாள் கருத்தரங்குக்கு மறைந்த எம் பேராசான் க. கைலாசபதி தலைமை தாங்குகிறுர் அவரின் தலைமையின்கீழ் "இரட்சணிய யாத்திரிகம்" என்னும் நூலைப் பற்றிய கருத்துரை வழங்குகிறேன்.

கருத்தரங்கு நிறைவு பெற்றதும் கலந்து கொண்டவர்களும் அதிபரும் உரையாடிக்கொண்டிருக்கின்றனர். அதிபர் என்னைச் சுட்டி உங்களின் பேச்சு நன்ருக இருந்தது. தொடர்ந்தும் எமது மாணுக்கர் களுக்கு நீங்கள் உதவவேண்டும் என்று விநயமாக வேண்டுகிறுர். அப்போ பேராசிரியர் கைலாசபதி நகைச்சுவையாக என்னைச் சுட்டி "இவர் சரஸ்வதியின் கடாட்சம் பெற்றவர்" என்று கூறுகிறுர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சு எனது மனைவியைப் பற்றித் திரும்புகிறது. எனது மனைவி சரஸ்வதி இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவி. அதிபர் இராமநாதனிடம் படித்தவர். பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு முடிந்து, நாங்கள் திருமணம் செய்த பின்பும் பெயரைக் கேட்ட அளவிலேயே ஆளை அடையாளம் கண்டு மகிழ்ந்ததமை இன்றும் என் நெஞ்சிலே பசுமையாக நினைவிருக்கிறது. "இனிமேல் நீங்கள் தப்பமுடியாது" எமது கல்லூரிக்கு அடிக்கடி வந்து உதவிபுரிய வேண்டுமென்று அன்புக் கட்டளையையும் விடுத்தார்.

நண்பர் மயிலங்கூடல் பி. நடராஜனுடனும், தனியேயும் அடிக்கடி சென்று மாணவர்களுக்குக் கருத்துரை வழங்கியிருக்கிறேன். அதிபரின் ஞாபகசக்தி, அன்பாக வேலை வாங்கும் பாங்கு, பாடசாலையிலுள்ள அதிகாரிசனை, நிர்வாகத் திறன் முதலிய பல நல்ல குணங்களை காணும் வாய்ப்பு எனக்கு நிறைய ஏற்பட்டது.

இளைப்பாறிய சில நாட்களின் பின்னர் என்னை, தன்னை வந்து காணும்படி செய்தியனுப்பியிருந்தார். சுகதேகியாகச், சுறுசுறுப்பாக இயங்கிய அவர் பல நல்ல விடயங்களைப் பற்றி உரையாடினார்.

நல்லூர் கல்வி வள நிலையத்தின் செயற்பாடுகளை முழுமையாகப் பயன்படுத்திய ஒரே ஒரு அதிபர் மிஸ் இராமநாதன் என்றுதான் நினைக்கிறேன். இந்து மகளிர் கல்லூரி வெளியிட்ட "பாலர் பா அமுதம்" குழந்தை இலக்கிய வரலாற்றில் மாத்திரமன்றி ஈழத்து இலக்கிய வரலாற்றிலும் இந்து மகளிர் கல்லூரியின் பெயரைப் பொறித்து வைத்திருக்கும் என்று எண்ணுகிறேன்.

அதிபர் இராமநாதனின் பன்முகப்பட்ட பணிகள் எமது கல்விப் பாரம்பரியத்தின் அழியாத சுவடுகளாக அமைந்து வழிகாட்டவேண்டுமென்று அவாவுறுகிறேன். அதிபர் இராமநாதன் ஓய்வு பெற்றபோது இந்து மகளிர் கல்லூரி அபிவிருத்திச் சங்கம் வழங்கிய பாமாலையின் ஒரு மலரை இங்கு நினைவு கூருகிறேன்.

"எங்களின் சிறுர்கள் இந்த
ஈழத்தில் மட்டு மன்றிப்,
பொங்கொளி உலகமெங்கும்
புகழ்பெற வளர்த் தெடுத்தோய்
உங்களின் சுகத்தை வேள்வி
ஆகுதியாய்ச் சொரிந்து
இங்குளோர் அமுதம் மாந்த
எழுந்த நற்சுடரே வாழி".

எஸ். சிவலிங்கராஜா, எம். ஏ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊருணி நீர் வற்றியதோ!

இந்து மகளிர் கல்லூரியின் பெரிய அதிபர் செல்வி பத்மா இராம நாதன் தன் அண்டை அயலிலுள்ள சிறியவர் பெரியவர் எல்லோருக் குமே "ரீச்சர் அன்ரி" தான்.

"ரீச்சர் அன்ரி" நிமிர்ந்த, நேர்கொண்ட, கம்பீரமான தோற்றத் துடன், எண்ணி அடிவைத்து எழிலார்ந்த நடைநடந்து காலையிலும் மாலையிலும் கல்லூரிக்குப் போகும்பொழுதும் வரும்பொழுதும் பக்கத்து வீட்டு பச்சிளங் குழந்தை முதல் அடுத்த வீட்டு 'ஐயர்' வரையும் வழியில் காணும் எல்லோரையும் அவரவர் தகுதிக்கேற்ப அகமும் முகமும் மலரச் சுகம் விசாரிப்பா. குழந்தைகளுடன் தானும் குழந்தை யாகவே மாறி மழலை பேசுவா.

தன்னோடொத்தவர், மூத்தவர், இளையவர் எவராயிலும் "ரீச்சர் அன்ரி" யிடம், கல்வி சம்பந்தமாகவோ, அரசியலோ, சமயச் சந்தே கமோ அல்லது வீட்டுப் பிரச்சனையோ எவையாயினும்சரி வந்து யோசனை கேட்டால் "சமன்செய்து சீர்தூக்கும் கோல்" போல் நடுநிலை தவருமல் அறிவுரைகள் கூறுவர். இடித்துரைக்கும் கட்டங்கள் வந்தாலும் தனக்கு வேண்டியவர் என்று யோசியாமல் இடித்தும் உரைப்பா.

திலகவதி அம்மையார் போல மாலை நேரங்களில் தோட்டத்துக்கு நீர் பாய்ச்சி, மலர் பறித்து கல்லூரிப் பிள்ளையாரை அலங்கரிக்க தினம் மாலை தொடுக்கும் காட்சி எம்மால் என்றுமே மறக்க முடியுமா? பசுமையாக நின்று நிழலாடுகிறதே அவர் தோற்றம்! பாரதியார் சொல்லியது போல அயலாருக்கு நல்ல நண்பியாய், ஆசிரியையாய், பண்பிலே தெய்வமாய் எங்கிருந்தோ வந்து எங்கள் உள்ளங்களைக் கொள்ளைகொண்டார். ஊருக்கு மத்தியிலிருந்து பிரதி பலன் கருதாது எல்லோருக்கும் நன்னீரை உதவும் நல்ல கிணறுபோல அயலாருக் கெல்லாம் உதவினர்.

"ரீச்சர் அன்ரி" நாங்கள் அறிந்தமட்டில் உலக ஆசா பாசங் களால் தாக்கப்படாமல் களங்கமற்ற தன் உள்ளத்தில் எந்தவிதமான சுமைகளையும் ஏற்ருமல் கடவுளையும் கல்லூரியையுமே கருத்தில்கொண்டு வாழ்ந்தார் என்பது ஊர் அறிந்த உண்மை.

இத்தகைய ஒரு நல்ல ஆன்மா – நான் வந்த காரியம் முடிந்து விட்டது. விடை தாருங்கள் என்று எங்களைக் கேட்டால் – எங்கே – கொடுக்க மறுப்போம் – என்று எண்ணிப் போலும் எங்களை கண் திறந்து பாராமலும் எங்களுக்குச் சொல்லாமலும் காற்ருய் பறந்து விட்டார். அவர் ஆன்மா இறைவனடியில் இன்புற்றிருக்கப் பிரார்த் திக்கும்

"அயலவர்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிக்குரல் ஓய்ந்ததோ

அடி எடுத்து நடைபயின்று அரிச்சுவடி கையேந்தி
படிப்பென்று சொல்லி உங்கள் பக்கம் வந்த நாள்முதலாய்
இன்று ஆசிரியத் தொழிலில் நான் அமர்ந்திருக்கும் நாள்மட்டும்
என்னோடு சிரித்துக் கதைபேசி சிந்திக்கப் புத்தி சொல்லி
இடித்தும் அறிவுறுத்தி என் ஏற்றத்தில் சிந்தை வைத்தீர்
அன்பைச் சொரிந்தென்னை அரவணைத்த "ராம் மாமி"
"மைதிலி" என்றழைக்கும் உங்கள் மணிக்குரல் ஓய்ந்ததென்று
உங்கள்
அஞ்சலித் தாள் அனுப்பி எனக்கறியத் தந்தா எங்களம்மா;
ராம்மாமி –

நான் கேள்விப்பட்டது உண்மைதானா? நான் உங்களை கண்ணாரக் காணமுன்னரே கடுகதியில் காலன் கவர்ந்துவிட்டானா?

நீங்களும்

அன்புக்குரியவர்களை அழவைத்து
அயலவர் நண்பர்களை ஏங்கவைத்து
பள்ளி வாழ்வின் பசுமை மாறமுன்னர் அப்
பள்ளிக்கடமை முடிந்ததென்று பரமசிவன்
பாதிவழியதனில் பறித்து விட்டான் உம்வாழ்வை
ஆண்டாண்டு காலம் நாம் அழுது புரண்டாலும்
மீண்டும் தான் வந்திடுமோ நின் மென்நடையும் அவ்வுருவும்
வேண்டாம் நாம் வேண்டுவது — "

தெய்வமாம் மாறிவிட்ட "ராம் மாமி" உங்களை நினைந்துருகும் அன்புள்ளங்களுக்கு ஒளியாய் நின்று வழிகாட்டுங்கள்.

— மைதிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் ரீச்சர் ஆன்ரி

"லேடீஸ் கொலிச்சின் பிறன்சிப்பல்" தான் எங்கள் ரீச்சர் ஆன்ரி. பெரியவர், சிறியவர் எல்லாருமே அவவை 'ரீச்சர் ஆன்ரி' என்று தான் கூப்பிடுவோம். அவ பள்ளிக்கூடத்துக்குப் பெரிய 'பிரின்சிப்பலாக' இருந்தாலும் எங்களுடன் சேரும்போது எங்களைப்போலாகி விடுவா. பகிடியான கதைகளும் அறிவுரைகளும் சொல்லித் தானும் சிரித்து எங்களையும் சிரிக்க வைப்பா. எங்களுக்கு 'அ, ஆ, வும் ஆங்கிலமும் சொல்லித் தருவதில் பெரு மகிழ்ச்சி காண்பா.

பள்ளிப் பிள்ளையாருக்கு மாலை கட்டித் தினமும் வணங்குவதைப் பார்த்து நாங்களும் அப்படி மாலை கட்டி கோவிலுக்குப் போகத் தொடங்கிவிட்டோம். பின்னேரங்களில் "ரீச்சர் ஆன்ரி" பள்ளிக்கூடத்தால் வந்ததும் நாங்கள் எல்லாரும் அவவுடன் சிரித்து மகிழ்ந்து கதை சொல்லி விளையாடுவோம். அவவும் எங்களுடன் மகிழ்ந்திருப்பதில் தன் களைப்பை மறந்துவிடுவா. எவ்வளவு மகிழ்ச்சி, நாங்கள், இப்படி சந்தோஷமாக இருப்பது கடவுளுக்குப் பிடிக்கவில்லை போலும் இல்லாவிடில் இவ்வளவு கெதியில் 'ரீச்சர் ஆன்ரி' சாமியாக வேண்டுமா?

'நல்லாரைக் காண்பதுவும் – சொற் கேட்பதும் அவரோடு இணங்கி வாழ்வதும் நன்று என்று படித்திருக்கிறோம். 'ரீச்சர் ஆன்ரி' இன்னும் சில காலம், நாங்கள் வளருமட்டும் இருந்தால் நாங்கள் எவ்வளவு நன்மை அடைந்திருப்போம்.

இறைவன் 'ரீச்சர் ஆன்ரிக்கு' ஆறுதல் கொடுப்பாராக!

ஜனனி
சுரேன்
வாசுகி
வாகினி
தயா
கவித்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்டிவிட்ட
## திறமை மிச்சம்

மரணம் உன்னை அணைத்த போதும்
நெஞ்சில் நிழலும் நினைவில் நீதான் தாயே
கருதி வந்த சிறிய வாழ்வில் — நீ
காட்டி விட்ட திறமை மிச்சம்.

அகரம் அதனை எழுத வைத்து
ஆய கலைகள் பல கற்க வைத்து
வெற்றிகள் எமைச் சேரும் போது
வெந்து விட்டாய் நீயும் தீயில்.

தாயாய் எமக்குப் பாசம் காட்டி
தந்தையாய் எமக்கு அறிவுரை புகட்டி
குழந்தையாய் மாறி சிரித்து விளையாடி
குறும்புகள் பல சேர்ந்தே செய்தாய்.

பெரியதாய் உன் பக்கம் அணைந்து
பெருமை சேர வாழ்ந்த காலம்
பேருய்ப் பெற்ற நினைவு நெஞ்சில்
பெரிதாய் இருக்கும் காலம் எல்லாம்

தாயைப் போன்ற அன்புத் தாயே நின்
தருவில் வளர்ந்த சேய்கள் யாம்
காலம் செய்த வினையை எண்ணி இங்கு
கலங்கிப் போன கண்கள் மிச்சம்.

[illegible]
க.கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடமை தவறாத அன்புச் சகோதரியாயும் பண்பிற் சிறந்த வழிகாட்டியாயும் வாழ்ந்து 5-4-87ல் அமரத்துவம் அடைந்து இன்று எங்கள் காவல் தெய்வமாய் விளங்கும்

## செல்வி பத்மாவதி இராமநாதனின்

பாதங்களில் எங்கள் அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கிறோம்.

126/4 அரசடி வீதி
யாழ்ப்பாணம்.
5-5-87

திரு. திருமதி க. லம்போதரன்
டாக்டர் சி. வேலாயுதன்
திருமதி வேலாயுதன்

செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org